RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணனின் கூட்டுக்குஞ்சுகள் நாவலில் வட்டாரச்சிக்கல்களும் பெண்ணுரிமையும் சிந்தனையும்

வெ. ஷீலா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஜஸ்டீஷ் பஷீர் அஹ்மத் சயீது மகளிர் கல்லூரி, சென்னை -18, தமிழ் நாடு, இந்தியா

# Regional conflicts and Feminist perspectives in Rajam Krishnan's Novel "Kootu Kunjugal"

V. Sheela [a, *]

[a] Department of Tamil, Justice Basheer Ahmed Sayeed College for women, Chennai -18, Tamil Nadu, India.

* Corresponding Author: Sheela.v@jbascollege.edu.in

Received: 10-11-2025
Revised: 22-02-2026
Accepted: 05-03-2026
Published: 16-03-2026

Check for updates

## ABSTRACT

Rajam Krishnan is a thoughtful writer who conducts field research and gathers new information to create novels. She is a scholar with multilingual expertise. She has the ability to directly observe the various struggles of human life, understand their real conditions, and use them as the foundation for her literary works. Rajam Krishnan's novel Koottukkunjugal subtly and precisely portrays the social and cultural lifestyle of a particular region. The causes behind regional problems are clearly depicted as labour issues, women's rights, and caste discrimination. This novel is shaped as a complete representation of feminist principles. Through the main character Viji, the novel conveys the idea that women too must take responsibility in finding solutions to social injustices. It highlights her determined efforts to solve the problems of child labour in matchbox factories, while she continues her personal journey without allowing her own life to fall apart. The novel shows her observing the working-class people from an outside perspective, developing compassion towards them, and stepping into the battlefield of struggle. Issues such as lack of job security, wage distribution systems, and the sufferings caused by them are strongly addressed. Overall, this novel stands as a work that brings out both regional issues and feminist thought.

**Keywords:** Regional Conflicts, Feminist Perspective, Social Injustice, Child Labour.

## முன்னுரை

பெண் படைப்பாளர்களின் முன்னோடியாக திகழ்பவர் ராஜம் கிருஷ்ணன். சமூக விழிப்புணர்வோடும் மனிதர்கள் மீதான கரிசனத்தோடும் தம் படைப்புக்களை உருவாக்கியவர். புதிய களங்களைத் தேடிச்சென்று அங்கு தங்கி மக்களுடன் பழகிய பின் செய்திகளைச் சேகரித்து வட்டாரத் தன்மையுடன் புதினங்களைப் படைப்பது இவருடைய தனிச்சிறப்பு. தம் வாழ்நாளில் பெரும் பகுதியை படைப்புக்காகவே செலவிட்ட படைப்பாளி என்றால் மிகையாகாது. இவரின் படைப்பான கூட்டுக்குஞ்சு நாவலில் வட்டாரச்சிக்கல்களும் பெண்ணுரிமைச் சிந்தனையும் குறித்து ஆய்வது இக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## கூட்டுக்குஞ்சு நாவல்

கூட்டுக்குஞ்சு நாவல் வட்டார சிக்கலான தீப்பெட்டித் தொழிலகக் குழந்தைத் தொழிலாளர் பிரச்சனையை மையமிட்டுச் செல்கிறது. வட்டாரப் பிரச்சனையின் வளர்ச்சி நிலை பெண்ணுரிமை போராட்டத்திற்கு வித்திடுகின்றது. குடும்பம், சமுதாயம் என்ற இரு வேறுபட்ட சூழல்களில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களே அவர்களின் படைப்பாக்க அடித்தளங்களாக உள்ளது. ”குடும்பம் என்ற எல்லையில் குடும்ப அங்கத்தினர்களுடன் ஏற்படும் உறவுகளும், முறிவுகளும், பொருள் வளமும்,

ஏழ்மையும், அன்பும், அன்பின்மையும், பொருண்மை வழிப்பட்ட சமுதாயத்தின் எந்த சிக்கலோடு தன்னை இனங்கண்டு கொள்கின்றனரோ அதுவே சிக்கல் மையமாகின்றது" (ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண் மாந்தர் ப.75) இவ்விரு சிக்கல்களின் இயல்பான தன்மையுடன் எதிர்கொள்பவள் பெண் என்பதால் ஏற்படும் விளைவுகளும் படைப்பாக்கத்தில் பங்கு கொள்கின்றன.

தலைமை மாந்தரான விஜியின் படைப்பு உருவாக்கம் வட்டாரப்பெண் மாந்தர்களிலிருந்து வேறுபடும் தன்மைக் கொண்டது. விஜி தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்தவர் அல்ல. முதுகலைப்பட்ட அறிவாலும் சிந்தனைப் போக்காலும் வட்டார தொழிலாளரிடமிருந்து வேறுப்பட்டவள். தன்னைச் சுற்றிருக்கும் வட்டாரப் பிரச்சனையால் தாக்குண்டு அறிவு வழிப்பட்ட அணுகுமுறையால் தீர்வு காணும் ஆக்கப் பூர்வமாக உருவாக்கப்பட்டிருக்கிறாள். ஓடி விளயாடும் இளம் பருவத்தில் கல்வி அறிவு பெறுவதற்கான வாய்ப்புக்களை இழந்து உடல் அளவிலும், மனதளவிலும், சமுதாயம் சார்ந்து பாதிக்கப்படுகின்ற குழந்தைகளின் நிலையும், குழந்தையின் வருமானத்தை எதிர் நோக்கியிருக்கும் பெற்றோரின் வறுமை நிலையும், பொருளாதார தேவைகளும் எடுத்துரைக்கின்றார். "குழந்தைகளுக்கு எதிர்காலம் இல்லாமல் செய்யக்கூடிய தொழிலும் உற்பத்திப் பெருக்கமும் உண்மையில் மகத்தான தேசிய நஷ்டம் என்று கருதுகின்றேன்"(கூட்டுக்குஞ்சுகள்,ப.266) என்ற நிலையில் சிக்கலை எதிர்கொள்கிறாள். சட்டங்களிட்டும் தடை செய்ய இயலாத ஒரு சமுதாய அநீதியை எழுதுகோல் முனையில் தீட்டிய நிலையில் குழந்தைத் தொழிலாளர் நலனுக்காக பத்திரிக்கையில் கட்டுரை எழுதுதல், பம்பாயில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துக் கொளல் என்ற இரு அனுபவங்களும் போலித்தனம் என்பதை விஜியின் வாயிலாக உணர்த்துகிறார் ராஜம் கிருஷ்ணன்.

## விஜியின் போராட்டம்

விஜியின் போராட்ட வளர்ச்சிக்கு தந்தையின் சங்கத்தலைவர் பதவியும், காதல் மணம் புரிந்துக்கொண்ட கணவர் தன் உணர்வுகளைப் புரிந்து கொள்ள மறுக்கின்ற நிலையும், "விஜியம்மா! நீங்கள் உச்சியிலேயே இருந்து விடக்கூடாது கீழே இறங்கி வந்து இந்தப் பெண்களுக்குத் தன்மான உணர்ச்சியைத் தட்டி எழுப்பணும்… உங்களைப் போல் உள்ளவங்க, அறிவைத் துரு பிடிக்க வச்சுட்டு முடங்கிடக் கூடாது. பெண்பிள்ளைகளுக்கிடயே ஒரு விழிப்புணர்ச்சிய நீங்க கொண்டு வரணும்" (கூட்டுக்குஞ்சுகள்,ப.129) என்ற மாரிசாமியைப் போன்ற தொழிலாளர்கள் அவள் செயல்பாட்டின் மீது நம்பிக்கை வைதிருத்தலும் காரணமாய் மிளிர்கின்றது. குடும்பச் சிக்கல், விஜியைப் புறத்தே தள்ள, வட்டாரச் சிக்கலை இயல்பாக ஏற்றுக்கொள்கிறாள். "உன் சொந்த வாழ்வில் வெறுப்பை வளர்த்துக் கொண்டால் பொதுவாழ்வில் எதுவும் நன்மை காண முடியாது" (கூட்டுக்குஞ்சுகள்,ப.188).என்ற வகையில் வழங்கப்படும் அறிவுரைகள் விஜியின் உறுதியை சலனப்படுத்தவில்லை.

## மரபு

மரபு கட்டுப்பாட்டிற்குள் வாழ்ந்து வருகின்ற ஐயாம்மா, விஜி மரபு மீறிச்செல்வாதாக வருந்திய நிலையில்" பழைய பாசிகள் .. பாசிகளல்ல.. அது மேலோட்டமாக மிதப்பது அல்லவா? இது மிக ஆழமாக வேரோடிவிட்ட முட்செடி வேர். இதைக்கெல்லி எறிவது சாத்தியமா?" (கூட்டுக்குஞ்சுகள்,ப.237) என்ற அறிவு ரீதியான கேள்வியால் அணுகுகிறாள். தன் இலட்சியப் பயணத்தில் சோர்வு ஏற்படக்கூடிய நேரங்களில் 'ஆதிவாசிகளின் கிளர்ச்சி' என்ற நூலாசிரியர் கோதாவரி பருலேகரைத் தனக்கு முன் மாதிரியாகக் கொள்கின்றாள். அவருடைய படைப்பு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. நாற்பதுகளில் அத்தகைய துணிவுள்ள பெருமாட்டி செயல்பட்டிருக்க முடியுமானால், எழுபதுகளின் முடிவில் செயல்படுத்த முடியாதா என்று தன்னைதானே கேள்விக்கு உட்படுத்தி செயலாற்றுகிறாள்.

விஜி சொந்த வாழ்வைப் பணயம் வைத்துப் பொது வாழ்வில் ஈடுபடுவது பற்றிய ஆற்றாமையை ஏனைய மாந்தர் வழி புலப்படுத்திய போதும் அவளுடைய எண்ண வழி ஆற்றாமையோ, தயக்கமோ புலப்படுத்தவில்லை. குழந்தைத் தொழிலாளர் முன்னேற்றம் பற்றிய பங்கெடுப்புகளில் இடையூறு ஏற்படினும் சற்றும் உள்ளம் தடுமாறாமல் எதிர்கொள்கிறாள். தன் இலக்கை நோக்கி நகரும் வேளையில் மணமுறிவிற்கென ஒதுக்கப்படும் லட்சரூபாயை பெரிதாக எண்ணாமல் ஒதுக்குகிறாள். மருமகள் என்ற சலுகையில் வரும் கல்லூரி ஆசிரியர் பணியை சுயநலமின்றி மறுத்து தன்முனைப்பை நிலைநாட்டுகிறாள்.

"இந்த மனிதர்களை, நான் மனிதர்களாகப் பார்க்க விரும்புகிறேன். உழைப்பும் ஊதியமும், எல்லாருக்கும் சமமான உரிமையுமாக வாழ்வதற்கான ஒரு லட்சியத்துக்காக நான் ஒரு குறுகிய எல்லைக்குள்ளிருந்து என்னை விடுவித்துக் கொண்டிருக்கிறேன்…. நான் அதற்காகப் போராடுவேன்." "(ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண் மாந்தர் ப.75)என்ற நிலையில், தன்னைச் சுற்றியுள்ள தொழிலாளர்க்கு, உழைப்பிற்கும் தன்னம்பிக்கைக்கும் இடையேயுள்ள உறவை உணர்ந்து குறிக்கோள் மாறாமல் செயல்படுகிறாள்.

“பொருளாதாரம், அரசியல் சார்ந்த அடிமைதனம், கண்மூடி வழக்கங்கள் இவற்றில் வேரூன்றிக்கிடக்கின்ற தீமைகளை எதிர்க்கப் போராட வேண்டும். நாட்டைப் பிணித்திருக்கின்ற இந்தப் போராட்டத்தினின்று விலகி நின்றால் பெண்கள் இயக்கம் செயல்படுதற்கான வாய்ப்புகளில்லை” (கூட்டுக்குஞ்சுகள்,ப.266) என்ற மஜூம்தாரின் கருத்திற்கிணங்க விஜி சமுதாயத்தை எதிர்த்து போராடும் பெண்ணாக படைக்கப்பட்டிருக்கிறாள். குழந்தைத் தொழிலாளர் சிக்கலுக்குள் சாதி, பிரச்சனையும் எடுத்து இயம்புகிறார் ஆசிரியர். விஜி சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவளாக வளர்ந்த நிலை, சாதி வேறுபாட்டை ஒழித்தல் பற்றிய எண்ணங்களுக்கும் வழிவகுக்கிறது. “அய்யம்மா, வெறும் தூலம் மன உடலுக்கு மட்டும் உரியவள் அல்ல. பழைய வேரூன்றிப் போன, இந்நாளுக்கு ஒவ்வாத கருத்துக்களின் பிரதியும் கூடத்தான்” (கூட்டுக்குஞ்சுகள், ப.239) என்ற விஜியின் கணிப்பு வழி பழமைப் போக்கு உணர்த்தப்படுகின்றது. சுமதி பாத்திரப்படைப்பு வாயிலாக கலப்பு மணம் செய்துகொண்டு எதிர்த்துச் செயல்படுகின்ற நிலையில் மரபு மாற்றத்திற்கு வித்திடுகின்றன.

## முடிவுரை

குழந்தைத் தொழிலாளர்களுக்காக சமூகத்தின் பழக்கவழக்கத்தினை உதறித் தள்ளிவிட்டு தன் மணவாழ்வினையே விடுத்து பாரம்பரிய கூட்டினை உடைத்துக் கொண்டு வெளியேறும் சுதந்திரப் பறவையாக மிளிர்கிறாள். தன்னைப் பிணைத்திருக்கும் கட்டுக்களிலிருந்து விடுவித்துக் கொண்டு சமுதாய நல மேம்பாட்டிற்காக செயல்படும் விதத்தில் பெண் விடுதலையுணர்வு கொண்டவளாக படைத்திருக்கிறார் ராஜம்கிருஷ்ணன்.

## References

Hari Vijayalakshmi, (1993) Rajam Krishnan’s puthinangkalil penmanthar, Ajanta Press, Vadipatti

Rajam Krishnan, (1975), Koottukkunjugal, Pari Publishing House, Chennai

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License